**செ.வெ.எண்-91** **நாள்-29.02.2020**

# அரியலூர் மாவட்டத்திலுள்ள பறவைகள் சரணாலயத்திற்கு வெளிநாட்டு பறவைகள் வருகை.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் பறவைகள் கணக்கெடுப்பு பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் பார்வையிட்டார்கள்.

அரியலூர் வனக்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் பறவைகள் கணக்கெடுப்பு பணி இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

**இப்பணிகளை பார்வையிட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

இப்பணியில் ஓய்வுப்பெற்ற கல்லூரி பேராசிரியர் முனைவர்.சிவசுப்பிரமணியன் தலைமையில் மீனாட்சி ராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியர்களை கொண்டு பறவைகள் கணக்கெடுப்பு பணி நடைபெறவுள்ளது.

இந்த பறவைகள் சரணாலயத்தில் வரித்தலை வாத்து இனமான பறவைகள் தற்போது 300 கிழக்கு ஆசியா நாடுகளிலிருந்து வந்துள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. சுமார் 45,000 வெளிநாட்டு பறவைகள் இப்பறவைகள் சரணாலயத்திற்கு வருகை புரிகின்றன. மேலும், சென்ற வருடத்தை விட இந்த வருடம் அதிக அளவில் பறவைகள் வருவதற்கான ஏற்ற சூழ்நிலை நிலவுகிறது.

முன்னதாக, சரணாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கான பொழுதுபோக்குக்கான அடிப்படை வசதிகள், பறவைகளின் கண்காட்சி அரங்கம் ஆகியவைகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார். மேலும், கரைவெட்டிபரதூர் முகப்பு சாலையிலிருந்து வேட்டக்குடி ஏரி வரை செல்ல 1.160 கி.மீட்டர் தூரம் தார்சாலை அமைக்க ரூ.34 இலட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ள கருத்துரு அனுப்பப்பட்டு, விரைவில் பணிகள் தொடங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, மாவட்ட வன அலுவலர் இளங்கோவன், வனச்சரக அலுவலர் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில், வனவர் சக்திவேல், வனப்பாதுகாப்பாளர்கள், வனக்காவல்கள் மற்றும் வேட்டை கருப்பு காவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**